பதிப்புரிமை வரையறுக்கப்பட்டது

CA THE INSTITUTE OF CHARTERED ACCOUNTANTS OF SRI LANKA

பக்கங்களின் எண்ணிக்கை: 10

# நிறைவேற்றுனர் மட்டம் I

# KE3 Fundamentals of Taxation

## (மாதிரிப் பரீட்சை)

**<u>பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்</u>**

(1) அனுமதிக்கப்பட்ட காலம் : வாசித்தல் மற்றும் திட்டமிடல் – 10 நிமிடங்கள்
விடையளித்தல் – 90 நிமிடங்கள்

**பகுதி A – வரியியல் அடிப்படைகள்**

(2) பிரிவு 1 (a) : 5 பல்தேர்வு வினாக்கள் (MCQ) – **சகல வினாக்களும் கட்டாயமானவை**
பிரிவு 1 (b) : 5 குறுகிய விடை வினாக்கள்– **சகல வினாக்களும் கட்டாயமானவை**
பிரிவு 2: 1 குறுகிய சூழ்நிலைசார் வினா– **கட்டாயமானது**
பிரிவு 3 : 1 பாரிய வினா – **கட்டாயமானது**

(3) வினா 1 (a) க்கான விடைகள் உமக்கு வழங்கப்பட்டுள்ள விசேட விடைத் தாளிலேயே வழங்கப்படுதல் வேண்டும். மிகவும் பொருத்தமான விடையினை (A, B, C அல்லது D) தெரிவுசெய்து, அந்த விடைக்கான எழுத்தினை உமது விடைப் புத்தகத்தில் உரிய வினா இலக்கத்திற்கு எதிரே எழுதுக.

சகல வினாக்களுக்குமான விடைகளும் உமக்குத் தரப்படும் விடைப்புத்தகத்தில் எழுதப்படல் வேண்டும்.

(4) பிரிவு 2 மற்றும் 3 இன் ஒவ்வொரு விடையையும் விடைப்புத்தகத்தின் தனியான பக்கங்களில் ஆரம்பிக்கவும்.

(5) விடைகள் யாவும் நீர் **பரீட்சை எழுத விண்ணப்பித்த அதே ஒரு மொழியில்** எழுதப்படல் வேண்டும்.

KE3

# பிரிவு 1

*அனைத்து வினாக்களும் கட்டாயமானவை.*
*பிரிவு 1 க்கான மொத்தப் புள்ளிகள்: 20 புள்ளிகள்*
*இந்தப் பிரிவுக்குப் பரிந்துரைக்கப்பட்ட காலம்: 36 நிமிடங்கள்*

**வினா 01**

**1(a):** மிகவும் பொருத்தமான விடையை தெரிவு செய்யவும்
**(மொத்தம் 10 புள்ளிகள்)**

1.1. வரியியலின் தத்துவங்களை வெளிப்படுத்தும் சரியான வகைப்படுத்தல் எது?

A. சமத்துவம், விருத்திமுறை, எளிமைத் தன்மை, நிச்சயத் தன்மை

B. சிக்கனத் தன்மை, பயனுறுதி, நிச்சயத்தன்மை, வினைத்திறன்

C. சமத்துவம், விருத்திமுறை, நியாயத் தன்மை, கிரய சிக்கனம்

D. வினைத்திறன், பயனுறுதி, விருத்திமுறை, வெளிப்படைத் தன்மை

**(2 புள்ளிகள்)**

1.2. உள்நாட்டு இறைவரித் திணைக்கள சட்ட ஏற்பாடுகளின் படியாக வதிவுள்ள தனிநபர் ஒருவரது வரிமதி வருமானத்தின் ஒரு பகுதியாக அமையக் கூடிய வருமானம் அல்லது பெறுகையினை கீழ்வருவனவற்றில் இருந்து அடையாளம் காண்க.

A. வணிக வங்கி ஒன்றில் பேணப்படும் வதிவற்றோர் வெளிநாட்டு நாணம நிலையான வைப்பு ஒன்றில் இருந்து கிடைக்கப்பெறும் 1000 சிங்கப்பூர் டொலர் பெறுமதியான வட்டி வருமானம்

B. வணிக வங்கி ஒன்றில் பேணப்படும் நிலையான வைப்பு ஒன்றில் இருந்து 2.5% நிறுத்தி வைக்கப்பட்ட வரி கழித்துப் பெறப்பட்ட வட்டி வருமானம் ரூபா 420,000

C. கண்டி நகரில் உள்ள வதிவிட இல்லம் ஒன்றில் இருந்து பெற்ற தேறிய வாடகை வருமானம் ரூபா 1,800,000

D. தேசிய லொத்தர் சபையினால் நடாத்தப்பட்ட லொத்தர் சீட்டிழுப்பு ஒன்றில் வெல்லப்பட்டு நிறுத்தி வைத்த வரி நீங்கலாக கிடைக்கப் பெற்ற பரிசுத் தொகை ரூபா 900,000

**(2 புள்ளிகள்)**

1.3. ஹெலடிவா குழுமத்தின் ஒரு சேய்க் கம்பெனியான ஹெலடிவா க்ரியேஷன் (தனியார்) வரையறுக்கப்பட்ட கம்பனியானது புகையிலைசார் உற்பத்திகளை தயாரிக்கும் வணிகத்தில் ஈடுபட்டுள்ளது. ஆண்டுக் காலப் பகுதியில் கம்பனி ரூபா 380,000,000 பெறுமதியான உற்பத்திகளை உள்நாட்டு சந்தையில் விற்பனை செய்துள்ளது. ஹெலடிவா க்ரியேஷன் (தனியார்) வரையறுக்கப்பட்ட கம்பனியின் வியாபாரத்தில் இருந்தான வருமானத்துக்கு பிரயோகிக்கத்தக்க வரி வீதம் யாது?

A. 10%

B. 12%

C. 28%

D. 40%

**(2 புள்ளிகள்)**

1.4. 2015/2016 ஆம் வரிமதி ஆண்டுக்கான வருமான வரிக் கொடுப்பனவு மற்றும் வருமான வரித் திரட்டு சமர்ப்பித்தல் ஆகியவற்றுக்கான இறுதித் திகதியை சரியாகக் குறிப்பிடும் விடையினைத் தெரிவு செய்க.

A. 15 மே 2016 மற்றும் 30 செப்டம்பர் 2016 அன்று அல்லது அதற்கு முன்பதாக

B. 15 மே 2016 மற்றும் 30 நவம்பர் 2016 அன்று அல்லது அதற்கு முன்பதாக

C. 30 செப்டம்பர் 2016 மற்றும் 30 நவம்பர் 2016 அன்று அல்லது அதற்கு முன்பதாக

D. 30 நவம்பர் 2016 மற்றும் 30 நவம்பர் 2016 அன்று அல்லது அதற்கு முன்பதாக

**(2 புள்ளிகள்)**

1.5.கமல் எண்டபிரைசஸ் வணிகத்தின் 31.03.2016 இல் முடிவடைந்த காலாண்டுக்கான விற்பனைப் புரள்வானது வர்ணப் பூச்சு உற்பத்திப் பிரிவில் இருந்து ரூபா 2,400,000 மற்றும் வர்ணப் பூச்சுக் கொள்கலன் உற்பத்திப் பிரிவில் இருந்து ரூபா 1,400,000 ஆகியவற்றை உள்ளடக்கி இருந்தது. 31.03.2016 இல் முடிவடைந்த ஆண்டுக்கான கமல் எண்டபிரைசஸ் வணிகத்தின் தேசத்தை கட்டியெழுப்பும் வரிப் பொறுப்புக்கான விற்பனைப் புரள்வு யாது?

A. ரூபா 3,800,000

B. ரூபா 2,400,000

C. ரூபா 1,300,000

D. ரூபா 1,200,000

**(2 புள்ளிகள்)**

**1(b):** சகல வினாக்களுக்கும் தரப்பட்டுள்ள செய்கை வினைச் சொற்களை கவனத்திற் கொண்டு சுருக்கமான விடை / கணிப்பீடுகளைத் தருமாறு வேண்டப் படுகிறீர்.

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

1.6. இலங்கையின் தற்போதைய வரி முறைமையில் பல்வேறு அரச திணைக்களங்கள் வரி சேகரிப்பு அதிகாரங்களைக் கொண்ட அமைப்புக்களாக காணப்படுகின்றன.

**வேண்டப்படுவது:**

இலங்கையில் வரி சேகரிப்பிற்கான பொறுப்பைக் கொண்ட நான்கு (04) வேறுபட்ட அமைப்புக்களைக் **குறிப்பிடுக.**

**(2 புள்ளிகள்)**

1.7. திரு. அஜித் வணசிங்க 2014 ஜுன் காலப் பகுதியில் தனது புதிய வீட்டின் நிர்மாண வேலைகளை நிறைவு செய்து உடனடியாகவே ரூபா 25,000 மாத வாடகை அடிப்படையில் மூன்று வருட காலத்துக்கு வாடகைக்கு வழங்கியுள்ளார். உள்ளூராட்சி அதிகார சபையினால் மதிப்பீட்டு நோக்கங்களுக்காக இந்த வீடு ரூபா 200,000 மதிப்பீட்டு பெறுமதிகளில் அளவிடப் பட்டுள்ளது. திரு. அஜித் 30% மதிப்பீட்டு சோலை வரிக் கொடுப்பனவுகள் மற்றும் ரூபா 128,000 பெறுமதியான வடிகால் கட்டமைப்பின் திருத்த செலவுகளை தங்கியுள்ளார்.

**வேண்டப்படுவது:**

2015/2016 ஆம் வரி மதி ஆண்டுக்கான உரிமையாளரது சட்ட நியதிப் படியான வாடகை வருமானத்தை கணிப்பீடுக.

**(2 புள்ளிகள்)**

1.8. வரையறுக்கப்பட்ட குளோபல் ட்ரவல் (தனியார்) கம்பனியினால் வாடகைக்கு வழங்கும் நோக்கில் 2011/2012 வரி மதி ஆண்டு காலப் பகுதியில் கொள்வனவு செய்யப்பட்ட போக்குவரத்து வண்டி ஒன்று 2015/2016 ஆம் வரி மதி ஆண்டில் ரூபா 520,000 இற்கு விற்பனை செய்யப்பட்டது. இவ் வாகனத்தின் கொள்வனவு விலையானது ரூபா 2,000,000 ஆகக் காணப்பட்டது.

**வேண்டப்படுவது:**

இவ் வாகனத்தின் விற்பனை மூலமான வரி நோக்கத்திற்கான இலாபம் அல்லது நட்டத்தினைக் கணிப்பீடுக.

**(2 புள்ளிகள்)**

1.9. திரு. சமரதிவாகர அவர்கள் 15.02.2016 அன்று உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் இருந்து வரித் தவறுகை அறிவித்தல் ஒன்றினைக் கிடைக்கப் பெற்றிருந்தார். அவர் இந்த தவறுகை அறிவித்தலுடன் இணங்கவில்லை.

**வேண்டப்படுவது:**

1. தவறுகையில் உள்ள வரிகளை சேகரிப்பதற்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்படக் கூடிய இரண்டு (02) நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.

**(2 புள்ளிகள்)**

1.10. சுப்ரீம் இண்டஸ்ட்ரீஸ் வணிகம் 31.12.2015 இல் முடிவடைந்த காலாண்டுப் பகுதியில் அல்பா மற்றும் பீட்டா என்னும் இரண்டு உற்பத்திகளை உற்பத்தி செய்து இருந்தது. பெறுமதி சேர் வரிச் சட்ட ஏற்பாடுகளின் படி பீட்டா உற்பத்தியானது வரி விலக்கழிக்கப்பட்ட உற்பத்தி ஆகும்.

வழங்கல்களின் பெறுமதி - அல்பா ரூபா 4,500,000

வழங்கல்களின் பெறுமதி - பீட்டா ரூபா 1,500,000

இரு உற்பத்திகள் தொடர்பிலும் செலுத்தப்பட்ட பெ. சே வரிகள் ரூபா 360,000

வழங்குநர் ஒருவரிடம் இருந்து வரிச் செலவுத் தாள்களில் பெறப்பட்ட பெ. சே. வரிக் கூறு ரூபா 30,000

**வேண்டப்படுவது:**

மேற் கூறப்பட்ட தகவல்களைக் கொண்டு 31 டிசம்பர் 2015 இல் முடிவடைந்த ஆண்டுக்காக செலுத்தப்பட வேண்டிய பெறுமதி சேர் வரியினைக் **கணிப்பீடுக**

**(2 புள்ளிகள்)**

# பிரிவு 2

| |
|---|
| *கட்டாயமான வினா.* |
| *பிரிவு 2 க்கான மொத்தப் புள்ளிகள்: 10 புள்ளிகள்.* |
| *இந்தப் பிரிவுக்கு பரிந்துரைக்கப்பட்ட காலம்: 18 நிமிடங்கள்.* |

**வினா 02**

| |
|---|
| சகல வினாக்களுக்கும் தரப்பட்டுள்ள செய்கை வினைச் சொற்களை கவனத்திற் கொண்டு சுருக்கமான விடை / கணிப்பீடுகளைத் தருக. |
| **(மொத்தம் 10 புள்ளிகள்)** |

1.11. வரையறுக்கப்பட்ட நோமட் உற்பத்தியாளர்கள் (தனி) கம்பனியானது 2007 ஆம் ஆண்டு 07ம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட ஒரு கம்பனியாகவும் விளையாட்டுப் பொருட்களின் உற்பத்தியில் ஈடுபடும் நோமட் குழுமத்தின் ஒரு சேய்க் கம்பனியாகவும் காணப்படுகிறது. இக் கம்பனி ஆண்டுக் காலப் பகுதியில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களில் உள்நாட்டு சந்தையில் ரூபா 260,000,000 பெறுமதியான விளையாட்டுப் பொருட்களை விற்பனை செய்துள்ளதுடன் ரூபா 240,000,000 பெறுமதியான விளையாட்டுப் பொருட்களை ஏறடறுமதி செய்துள்ளது. உமக்குப் பின்வரும் மேலதிக தகவல்கள் தரப்பட்டுள்ளன.

- வரையறுக்கப்பட்ட நோமட் உற்பத்தியாளர்கள் (தனி) கம்பனி 2014/2015 வரி மதி ஆண்டு உழைத்துக் கொண்ட சட்ட நியதிப் படியான வியாபார இலாபம் ரூபா 100,000,000 ஆகவும் ஏற்றுமதி இலாபம் ரூபா 40,000,000 ஆகவும் காணப்பட்டது.

- 2014/2015 வரி மதி ஆண்டு காலப்பகுதியில் கம்பனி பின்வரும் வருமானங்களைப் பெற்று இருந்தது.

| **விபரம்** | **ரூபா** |
|---|---:|
| நிலையான வைப்புக்கள் மீதான வட்டி (தேறிய) | 180,000 |
| திறைசேரி உண்டியல்கள் மீதான வட்டி | 45,000 |
| பங்கிலாபம் (தேறியது) | 90,000 |
| வருமான வரி விலக்களிக்கப்பட்ட பங்கிலாபங்கள் | 50,000 |

- 2014/2015 வரி மதி ஆண்டு காலப்பகுதியில் பங்குச் சந்தையின் பாதகமான நிலைமை காரணமாக கம்பனி பங்கு வர்த்தகத்தில் ரூபா 800,000 நட்டங்களை எதிர்கொண்டு இருந்தது.

- 2014/2015 ஆண்டு காலப்பகுதியில் கம்பனி பின்வரும் கொடுப்பனவுகளைச் செலுத்தி இருந்தது.

| விபரம் | ரூபா |
| --- | --- |
| புதிய தொழிற்சாலைக் கட்டடத்தைக் கட்டுவதற்காக இலங்கை வங்கியிடம் இருந்து கடனாகப் பெறப்பட்ட தொகைக்கான மீள் கொடுப்பனவுத் தவணைக் கட்டணங்கள் (இது ரூபா 1,200,000 மூலதன மீள் செலுத்துகையை உள்ளடக்கி உள்ளது) | 2,400,000 |
| நோயாளர் மற்றும் விசேட தேவை உள்ளோருக்கான பராமரிப்பை வழங்கும் அங்கீகரிக்கப்பட்ட தர்ம ஸ்தாபனம் ஒன்றுக்கான காசு வடிவிலான நன்கொடைகள் | 750,000 |
| நமக்காக நாம் நிதியத்துக்காக சீமெந்து நன்கொடை | 400,000 |
| சுய மதிப்பீட்டு அடிப்படையிலான வரிக் கொடுப்பனவுகள் | 18,000,000 |

- வரையறுக்கப்பட்ட நோமட் உற்பத்தியாளர்கள் (தனி) கம்பனி 2014/2015 வரி மதி ஆண்டு உழைக்கப்பட்ட இலாபத்தில் இருந்து 10.04.2015 அன்று தமது பங்குதாரர்களுக்கான பங்கிலாபமாக ரூபா 5,000,000 இனைப் பிரேரித்து, 30.04.2015 அன்று செலுத்தி இருந்தது.

**வேண்டப்படுவது:**

2015/2016 ஆம் வரி மதி ஆண்டுக்காக வரையறுக்கப்பட்ட நோமட் உற்பத்தியாளர்கள் (தனி) கம்பனியினது மொத்த வரிப் பொறுப்பு மற்றும் மீதமாக செலுத்த வேண்டிய வரிகள் ஆகியவற்றைக் **கணிப்பிடுக.**

**(10 புள்ளிகள்)**

# பிரிவு 3

| |
|---|
| *கட்டாயமான வினா.*<br>*பிரிவு 3 க்கான மொத்தப் புள்ளிகள்: 20 புள்ளிகள்.*<br>*இந்தப் பிரிவுக்கு பரிந்துரைக்கப்பட்ட காலம்: 36 நிமிடங்கள்.* |

**வினா 03**

| |
|---|
| சகல வினாக்களுக்கும் தரப்பட்டுள்ள செய்கை வினைச் சொற்களை கவனத்திற் கொண்டு சுருக்கமான விடை / கணிப்பீடுகளைத் தருக.<br>**(மொத்தம் 20 புள்ளிகள்)** |

திரு. உத்பால பெரேரா வணிக நிறுவனம் ஒன்றில் பணிபுரியும் ஒரு பொறியியலாளர் ஆவார். 31.03.2016 இல் முடிவடைந்த ஆண்டு காலப்பகுதிக்கான அவரது வருமானங்கள் மற்றும் செலவுகள் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**<u>வேலைவாய்ப்பு</u>**

| **விபரம்** | **ரூபா** |
|---|---|
| தேறிய சம்பளம் (கீழே தரப்பட்டுள்ள குறிப்பைப் பார்க்கவும்) | 1,340,000 |
| ஊழியர் சேமலாபா நிதி | 180,000 |
| உழைக்கும் பொது செலுத்தும் வரி | 40,000 |

***<u>குறிப்பு</u>:*** தேறிய சம்பளமானது ஊழியர் சேமலாபா நிதி மற்றும் உழைக்கும் போது செலுத்தும் வரிக்காக பொருத்தமான கழிப்பனவுகள் மேற்கொள்ளப்பட்ட பின்னரானதாகும்.

அதற்கு மேலாக கம்பனி அவருக்கு டிசம்பர் 2015 காலப் பகுதியில் பண்டிகைக் கால கொடுப்பனவாக ரூபா 50,000 இனை வழங்கி உள்ளதுடன் அவரது சிறு வயது மகனான (10 வயது) மருத்துவச் செலவுக்கான மீளளிப்புக்காக மார்ச் 2016 காலப் பகுதியில் ரூபா 60,000இனை வழங்கி இருந்தது.

திரு உத்பால, கம்பனியினால் வழங்கப்பட்டுள்ள இல்லம் ஒன்றில் வசிக்கிறார். அந்த வீட்டின் உரிமையாளருக்கு கம்பனி மாதம் ஒன்றுக்கு ரூபா 25,000 வாடகையாக செலுத்துகிறது. இந்த வீட்டிற்கான மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 200,000 ஆகவும் செலுத்தப்பட வேண்டிய சோலை வரி 20% ஆகவும் உள்ளது.

**<u>உயர் தொழில் வருமானம்</u>**

வார இறுதி நாட்களில் அவர் சுயாதீனமான ஆலோசனை சேவை வழங்கல்களை மேற்கொள்வதுடன் ஆண்டுக் காலப் பகுதியில் இதன் மூலம் ரூபா 600,000 இனை உழைத்திருக்கிறார். இந்த இலாபத்தினை அடைவதற்காக அவர் பின்வரும் செலவினங்களைக் கழித்துள்ளார்.

| செலவுகள் | ரூபா |
|---|---|
| உதவியாளர்களுக்கான சம்பளங்கள் | 240,000 |
| அச்சிடல் மற்றும் காகிதாதிகள் | 50,000 |
| பத்திரிகை மற்றும் விளம்பரப்படுத்தல் | 60,000 |
| கணனி கொள்வனவு | 80,000 |
| சேவை பெறுனர்களுக்கான பொழுதுபோக்கு செலவுகள் | 20,000 |
| தேய்மானம் | 32,000 |
| மின்சாரம் மற்றும் தொலைபேசி | 80,000 |

சம்பளங்கள் அறிக்கைகளை தயாரிப்பதற்காக அவரது மனைவிக்கு செலுத்தப்பட்ட ரூபா 150,000 இனை உள்ளடக்கி உள்ளது. விளம்பரப்படுத்தல் செலவுகள் ஊழியர் ஆட்சேர்ப்புக்காக மேற்கொள்ளப்பட்ட பதவி வெற்றிட விளம்பர செலவான ரூபா 12,000 இனை உள்ளடக்கி உள்ளது. மொத்த வீட்டினுடைய மின்சாரம் மற்றும் தொலைபேசிக் கட்டணங்கள் வருமானத்தில் இருந்து கழிக்கப்பட்டு உள்ளன. இக் கட்டணங்களில் அண்ணளவாக 20% ஆனவையே உயர்தொழில் வருமானத்துக்கானது என மதிப்பிடப்பட்டு உள்ளது.

ஆண்டுக் காலத்தில் கொள்வனவு செய்யப்பட்ட கணனிக்கு மேலதிகமாக, ரூபா 60,000 பெறுமதிக்கு 2013/2014 வரி மதி ஆண்டு காலப் பகுதியில் கொள்வனவு செய்யப்பட்ட அலுவலக மேசை மற்றும் கதிரைகளும் காணப்படுகின்றன.

**<u>ஏனைய வருமானம்</u>**

| விபரம் | ரூபா |
|---|---|
| நிலையான வைப்புக்கள் மீதான வட்டி (தேறியது) | 276,000 |
| திறைசேரி உண்டியல்கள் மீதான வட்டி | 90,000 |
| மகனின் வங்கிக் கணக்கில் இருந்தான வட்டி | 45,000 |
| பங்கு விற்பனை இலாபம் | 300,000 |

அவர் நுகேகொடையில் சொந்த வீடு ஒன்றினை வைத்திருப்பதுடன் 01 ஜனவரி 2015 முதல் அந்த வீட்டினை ரூபா 50,000 மாதாந்த வாடகைக்கு வழங்கி உள்ளார். இந்த வீட்டின் நிர்மாணம் 2014 இல் முடிவுற்று இருப்பதுடன் அதன் இடப் பரப்பு 1,800 சதுர அடிகளாக காணப்படுகிறது. இந்த வீட்டின் பெறுமதி மதிப்பீடு ரூபா 200,000 ஆகவும் செலுத்த வேண்டிய வரிகள் 30% ஆகவும் உள்ளது.

திரு பெரேரா நாமல் அலகுப் பொறுப்பாட்சியில் இருந்து ரூபா 20,000 இனைப் பங்கிலாபம் ஆகவும் ரூபா 63,000 இனை டொயோட்டா பொது நிரல் படுத்திய கம்பனியில் இருந்து தேறிய பங்கிலாபமாகவும் பெற்றுக் கொண்டார்.

**<u>கொடுப்பனவுகள்</u>**

வீட்டினுடைய நிர்மாணத்துக்காக வங்கியில் பெற்றுக் கொண்ட கடன் மற்றும் கடனட்டை ஆகியவற்றுக்காக செலுத்தப்பட்ட வட்டிகள் முறையே ரூபா 123,000 மற்றும் ரூபா 18,000 ஆகும்.

அவர் தேசிய பாடசாலை ஒன்றில் ஆய்வுகூடம் ஒன்றினை அமைப்பதற்காக ரூபா 100,000 இனை நன்கொடையாக வழங்கி உள்ளதுடன் நோயாளர் மற்றும் விசேட தேவை உள்ளோருக்கான பராமரிப்பை வழங்கும் அங்கீகரிக்கப்பட்ட தர்ம ஸ்தாபனம் ஒன்றுக்கு ரூபா 80,000 இனையும் வழங்கி உள்ளார். குணப்படுத்த முடியாத நோய்களுக்கான மருத்துவக் காப்பீடுக்காக செலுத்தப்பட்ட தவணைக் கட்டணம் ரூபா 48,000 ஆகும். 2015/2015 ஆம் வரி மதி ஆண்டுக்காக சுய மதிப்பீட்டு வரிகளாக செலுத்தப்பட்ட தொகை ரூபா 40,000 ஆகும்.

**வேண்டப்படுவது:**

1. 2015/2016 ஆம் வரி மதி ஆண்டுக்காக திரு. உத்பால அவர்களது மொத்த சட்ட நியதிப்படியான வருமானம், வரி மதி வருமானம், வரிப் பொறுப்பு வருமானம், மொத்த வரிப் பொறுப்பு மற்றும் மீதமாக செலுத்த வேண்டிய வரிகள் ஆகியவற்றைக் **கணிப்பிடுக.**

**(மொத்தம் 20 புள்ளிகள்)**